திரு. எம். சுரேந்திரன் : சார், குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலமாக ஆட்களைக் குறைக்கும் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் 5 வருஷத் திட்டத்தில் ஆட்களின் எண்ணிக்கையைக் கொண்டு பணம் கொடுக்கப்படுவதால் இந்தக்கொள்கையை மறுபரிசீலனை செய்ய முயற்சி எடுக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியை ஏற்கனவே போட்டுவிட்டார்கள்.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : தலைவரவர்களே, குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதற்கு அநேகர் முன்வந்திருக்கிறார்கள். சர்க்கார் மருத்துவமனைகளில் செய்து கொள்கிறார்கள். அது மட்டுமல்லாமல், தனிப்பட்ட மருத்துவர்களிடமும் நிறையப்பேர் குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்கிறார்கள். அந்தக் கணக்குகளும் அரசாங்கத்திற்குக் கிடைக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தனிக் கேள்வி போட்டால் தகவல் தரப்படும்.

வனஸ்பதி தொழிற்சாலை, விழுப்புரம்

* 39 வினா—**திரு. சி. கோவிந்தராசன்**: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரத்திலுள்ள மதராஸ் வனஸ்பதி தொழிற்சாலைக்கு அரசாங்க உதவித் தொகை எவ்வளவு கொடுக்கப்பட்டுள்ளது ?

(இ) அதில் உற்பத்தியாகும் பொருள் என்ன ?

(உ) அந்தத் தொழிற்சாலை சில மாதங்களாக எந்த உற்பத்தியும் செய்யாமலிருப்பதற்குக் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இந்தத் தொழிற்சாலைக்கு ரூ. 10 லட்சம் கடன் வழங்கப்பட்டது.

(இ) இந்தத் தொழிற்சாலை இருமுறை தூய்மைப்படுத்தப்பட்ட 'மாவன்' என்னும் உணவு எண்ணெயை 1—12—1967 தேதியிலிருந்தும் வனஸ்பதியை 1968 ஏப்ரலிலிருந்தும் தயாரித்து வருகிறது.

(உ) பணமுடை ஏற்பட்டதால் இத் தொழிற்சாலை சிறிது காலத்திற்குச் செயல்படாமலிருந்தன. மேலும் அப்போதிருந்த தலைவராகிய திரு. C.P. சின்ஹா அவர்கள் 22—6—1966 நாளன்று திடீரென்று இறந்து விட்டார். எனவே, திரு. C.P. சின்ஹா அவர்களின் உறுதிமொழி மீது வங்கி வணிகர்கள் கொடுத்து வந்த கடன் உதவியைத் தொடர்ந்து பெற முடியாமல் போய்விட்டது.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட அந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுவது புகையிலையிலிருந்து எடுக்கப்படக்கூடிய ஒருவிதமான எண்ணெய். அந்த

1969 பிப்ரவரி 24]

எண்ணெய்க்கும் வனஸ்பதி போன்ற உணவுச் சத்து எண்ணெய்க்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அது தனியார் நிறுவனம். அந்த ஆராய்ச்சி நமக்கு வேண்டாம்.

திரு. எம். சண்முகம்: தலைவரவர்களே, சுமார் 50 இலட்சம் ரூபாய் செலவிட்டு ஏற்பட்ட அந்தத் தொழிற்சாலை செயல்படாமல் இருந்து வருகிறது. அதை அதனுடைய உரிமையாளர்கள் எடுத்து நடத்த பண வசதி இல்லாததால் இதை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு, கூட்டுறவுத்துறையிலாவது நடத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 1948-ஆம் ஆண்டு தொடங்கப் பட்ட நிறுவனம். அதை நடத்துபவர்கள் சரிவர நடத்தாத காரணத்தால் இழப்பு ஏற்படுகிறது. நாம் கொடுத்திருக்கக்கூடிய தொகையை, நன்கு பயன்படுத்தி நன்றாக நடத்த வேண்டுமென்று தள்ளிப்போட்டுக் கொண்டு வருகிறோம். அப்படியிருக்கும் பொழுது அந்த நஷ்டத்திலே நாமும் ஈடுபடலாமா என்பதுதான் சந்தேகமாக இருக்கிறது.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவரவர்களே, தனியார் துறையில் தனியார் செய்யக்கூடிய பொருளைப்பற்றி நாம் தலையிட முடியாது என்ற கருத்தில் அமைச்சரவர்கள் கூறினார்கள். வனஸ்பதி உற்பத்தி செய்வதாக 'லைசென்ஸ்' பெற்று, ரூபாய் பத்து இலட் சத்தை அரசினிடமிருந்து கடனாகவும் பெற்று புகையிலையிலிருந்து எடுக்கக்கூடிய எண்ணெயை உற்பத்தி செய்தால் அது அரசாங்கத்தை ஏமாற்றுவதாக ஆகாதா? அதைத் தடுக்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அவர்கள் 'லைசென்ஸ்' பெற்று நடத்துகிறார்கள். வனஸ்பதி தயாரிக்க முயற்சித்தவர்கள் அதிலே தோல்வி கண்டு, முதலீட்டுப்பணத்தினால் வேறு எப்படியாவது லாபத்தைப் பெருக்க வேண்டுமென்ற முறையிலே அவர்கள் ஈடு பட்டிருக்கலாம். அதைப்பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் கிடையாது.

DR. H. V. HANDE: Is there no power to the Government to prevent such malpractices, taking licence for one particular manufacture and after taking the licence and keeping it run for some time, transform the work and completely change the work for which they had originally obtained the licence? Is there no power to book these people and take criminal action against them?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த மாதிரி தகவல் இல்லை என்று சொன்னேன். எங்களிடத்திலுள்ள தகவலின்படி, doubly-refined edible oil என்பதையே அவர்கள் உற்பத்தி செய்வதாக இருக்கிறது. லைசென்ஸ் கொடுப்பது, அதை மீறுவது எல்லாம்

எல்லாம் மத்திய அரசாங்கத்தின் கீழ் வருகிறது. நாம் உதவி செய்கிறோம். உதவி செய்த பணம் வீணாகாமல், பணத்தைத் திருப்பிக் கட்டினால் போதும் என்பதுதான் நம் எண்ணம்.

மணப்பாறையில் சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்

* 40 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை தனி தாலுகாவாக மாற்றப்பட்ட பிறகு அங்கு தனியாக சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஒன்று துவங்க வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மணப்பாறையிலுள்ள மக்கள் நீதி மன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் திருச்சிக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்கள் நெடுந்தூரம் செல்வதால் பல நாட்களை வீணாக்க வேண்டியிருக்கிறது. இதை நம்முடைய அரசாங்கம் பரிசிலனை செய்து மணப்பாறையில் இனிமேலாவது கோர்ட்டுகள் திறப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மணப்பாறையிலிருந்து திருச்சிக்கு 22 மைல்கள் தான். ஏராளமான பஸ்கள் ஓடுகின்றன.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அரியலூரில் சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் நிறுவுவதற்கும் திட்டம் ஏதாவது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதுபற்றித் தகவல் இல்லை.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கோர்ட்டுகள் நிறுவும்பொழுது எந்த அடிப்படையிலே உரிமை வழங்கப்படுகிறது ? தாலுகாவிற்கு ஒன்று என்ற அடிப்படையிலா ? மக்கள் தொகை அடிப்படையிலா ? தேவையின் அடிப்படையிலா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு வட்டாரத் தலைநகரிலே இது போன்ற நீதிமன்றம் இருக்கலாம் என்ற குறிப்பு இருக்கிறது. ஆனால், நீதிமன்றம் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னாலே உயர்நீதி மன்றம் கலந்தாலோசிக்கப்படுகிறது. அவர்கள் அந்த ஊரிலே நீதிமன்றம் ஏற்படுத்தினால் போதிய வழக்குகள் இருக்கும், நாம் செலவழிக்கக்கூடிய தொகைக்குப் பயன் கிடைக்கும் என்று முடிவு கூறினால் அது பரிசீலிக்கப்படும்.